

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.1.2025) முகாம் அலுவலகத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் சந்தித்து, கலை பண்பாட்டுத்துறை சார்பில் சென்னையில் 13.01.2025 முதல் 17.01.2025 வரை நடைபெறவுள்ள "சென்னை சங்கமம் நம்ம ஊரு திருவிழா"விற்கான அழைப்பிதழை வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (12.1.2025) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற "அயலகத் தமிழர் தினம் 2025"– விழாவில், மொரிஷியஸ் நாட்டின் வெளியுறவுத் துறை, இணை அமைச்சர் ராஜன் நரசிங்கன் அவர்கள் சந்தித்துப் பேசினார்.

## தமிழறிஞர் – பேராசிரியர் சாலமன் பாப்பையா துணைவியார் மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜன.14-

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழறிஞர் சாலமன் பாப்பையா அவர்களின் துணைவியார் அவர்களின் மறைவுக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து செய்தி வெளியிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :-

தமிழறிஞரும் பிரபல பேச்சாளருமான பேராசிரியர் சாலமன் பாப்பையா அவர்களின் துணைவியார் திருமதி. ஜெயபாய் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருந்துகிறேன்.

உற்ற துணையான வாழ்விணையரை இழந்து தவிக்கும் திரு. சாலமன் பாப்பையா அவர்களுக்கு எனது ஆறுதலையும் இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

நன்னிலம் தொகுதியில் வலங்கைமான் புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை

## நீடாமங்கலம் - வலங்கைமான் பகுதிகளை இணைக்க உயர் மட்டப் பாலம்!

### சட்டப்பேரவையில் அமைச்சர் எ.வ.வேலு பதில்!

சென்னை, ஜன. 14 -

நன்னிலம் தொகுதியில் வலங்கைமான் புறவழிச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா? என சட்டப்பேரவையில் அ.தி. மு.க. உறுப்பினர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு அமைச்சர் எ.வ.வேலு அளித்த பதில் வருமாறு:-



வலங்கைமான் புறவழிச் சாலையானது கும்பகோணம் மான்னார்குடிஅதிராம்பட்டினம் சாலை மாடாகுடி அருகில் துவங்கி அதே சாலையில் தொழுவூரிலே சேருகிறது. மொத்த நீளம் 5.40 கிலோ மீட்டர். இருவழிச் சாலையானது 7 கிராமங்களை உள்ளடக்கி 15.30 ஹெக்டேர் தனியார் நிலம் கையகப்படுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. இப்புறவழிச் சாலை அமைக்க நில எடுப்புப் பணிக்காக ரூ.3.14 கோடிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டிருக்கிறது. இது போதவில்லை என்று தற்போது கூடுதலாக ரூ.1.71 கோடி திருத்திய நிர்வாக அனுமதி கோரி அரசின் பரிசீலனையில் இருக்கிறது. நில எடுப்புப் பணிகள் முடிந்த உடனேயே புறவழிச் சாலை அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திருவாரூர் நெடுஞ்சாலை கோட்டத்திற்குட்பட்ட மாநில நெடுஞ்சாலை எண் 66ல் வலங்கைமான் குடமுருட்டி ஆற்றிலிருந்து தொழுவூர் ஊராட்சி செம்மங்குடி வரை பழுதடைந்துள்ள சாலையை உடனடியாக சரிசெய்து செம்மைப் படுத்தி தருமாறு உறுப்பினர் குறிப்பிட்டார்.

உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல அதன் முக்கியத்துவம் கருதிதான் இன்னும் கூடுதலாக ரூ.1.71 கோடி வேண்டுமென்று நிதித் துறைக்கு அனுப்பியிருக்கிறோம். உடனே அந்த பணத்தைப் பெற்று நிலம் எடுக்கப்பட்டு இந்த ஆண்டே அந்தப் பணி தொடங்குவதற்கு அரசு முன்வரும்.

இரா.காமராஜ்: திருவாரூர் மாவட்டம், நன்னிலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வலங்கைமான் வட்டம், நார்த்தாங்குடி ஊராட்சி பகுதியில் அதாவது, கோயம்புத்தூர்நாகப்பட்டினம் தேசிய நெடுஞ்சாலை மற்றும் கும்பகோணம், அதிராம்பட்டிணம், மன்னார்குடி வழியாக கும்பகோணம் அதிராம்பட்டிணம் மாநில நெடுஞ் சாலை ஆகிய இந்த இரண்டு சாலைகளும் நார்த்தாங்குடியிலேதான் சந்திக்கிறது. இந்த bypass வேலை முடிந்து 6, 7 மாதங்கள் ஆகிறது. இந்த இரண்டு சாலைகளும் சந்திக்கிற இந்த நார்த்தாங்குடியில் தினந்தோறும் அதிகமான விபத்துகள் நடந்துகொண்டிருக்கிறது. இந்த விபத்துகளைத் தவிர்க்கும்பொருட்டு அங்கே ஒரு உயர் மட்டப் பாலம் அமைப்பதற்கு அமைச்சர் முன்வருவார்களா என குறிப்பிட்டார்.

திருவாரூர் என்பது ஒரு புகழ்பெற்ற ஊர். என் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கிற என் அன்புத் தலைவர் திருவாரூரில்தான் அவர் வாழ்ந்த வரலாறு உள்ள ஒரு மாபெரும் ஊர், அந்த ஊர்.

அந்த திருவாரூரையும், தஞ்சாவூரையும் இணைப்பது, தேசிய நெடுஞ்சாலை ஆகும். அதேநேரத்தில், நீடாமங்கலம் மற்றும் வலங்கைமான் பகுதிகளை இணைப்பது, மாநில நெடுஞ்சாலை ஆகும். அந்தப் பகுதியில்தான் உயர் மட்டப்பாலம் கட்டப்படுமா என்று உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நாங்களும் அடிக்கடி திருவாரூர் செல்கின்ற காரணத்தால், விபத்துகளைக் குறைக்க வேண்டிய காரணத்தால், அதன் முக்கியத்துவம் கருதி, அதன் அடிப்படையில் தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறோம். அவசியமாக அப்பகுதியில் ஒரு உயர்மட்டச் சாலை அமைக்கப்பட வேண்டுமென்று கடிதம் எழுதியிருக்கிறோம். அதனை தொடர்ந்து வலியுறுத்தி, நிறைவேற்றிக் கொடுப்பதற்கு அரசு முயற்சி செய்யும்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு கூறினார்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடப்பு சம்பா, தாளடி பருவ அறுவடை நெல் கொள்முதலுக்கு

## 1126 நேரடி கொள்முதல் நிலையங்கள் திறப்பு!

### 5,48.422 மெட்ரிக் டன் நெல் கொள்முதல்! அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தகவல்!

சென்னை, ஜன. 14 -

தமிழ்நாடுநுகர்பொருள் வாணிபக் கழகத்தால் நடப்பு சம்பா, தாளடி பருவ அறுவடை நெல்லை கொள்முதல் செய்வதற்காக நாளது தேதியில் 1176 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு 5,48,422 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் தேவையான கூடுதல் நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திட மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும், அக்டோபர் 1-ம் தேதி துவங்கும் நெல் கொள்முதல் பருவத்தினை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளின் நலன் கருதி செப்டம்பர் மாதம் முதல் துவங்க கடந்த மூன்று ஆண்டுகளாக ஒன்றிய அரசிடம் அனுமதி பெற்று, செப்டம்பர் 1-ந் தேதி முதல் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், கே.எம்.எஸ் 2023-2024-ம் கொள்முதல் பருவத்தில் நெல் கொள்முதலை அதிகரிக்க ஏதுவாக, விவசாயி களை ஊக்குவிக்கும் விதமாக மாநில அரசால் ஏற்கனவே விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வந்த ஊக்கத்தொகை சன்னரகம் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.75/ லிருந்து ரூ.107/ ஆகவும், பொது ரகம் ரூ. 50 லிருந்து ரூ. 82 ஆகவும் உயர்த்தி வழங்கப்பட்டது. மேலும் நடப்பு கே.எம்.எஸ் 2024-2025 ம் கொள்முதல் பருவத்திற்காக ஏற்கனவே, வழங்கி வந்த ஊக்கத்தொகை குவிண்டால் ஒன்றுக்கு முறையே சன்னரகம் ரூ. 107 லிருந்து ரூ.130 ஆகவும் பொதுரகம் ரூ.82 லிருந்து ரூ.105 ஆகவும் உயர்த்தி குறைந்தபட்ச ஆதார விலையுடன் ஒரு குவிண்டால் சன்னரகம் நெல் ரூ.2,450/-க்கும் பொதுரகம் நெல் ரூ.2405/-க்கும் விவசாயி களி டமிருந்து கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டத்தின் கீழ் கடந்த கே.எம்.எஸ் 2021-2022 மற்றும் 2022-2023 ஆகிய பருவங்களில் சுமார் 40 இலட்சம் மெ.டன்னிற்கு கூடுதலாக நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் நடப்பு கே.எம்.எஸ் 2024--2025-ம் பருவத்தில் 01.09.2024 முதல் 09.01.2025 வரை 75,936 விவசாயிகளிட மிருந்து 5,48,422 மெ.டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, கொள்முதலுக்கான விலையாக ரூ.1,313.96 கோடி விவசாயி களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் சம்பா, தாளடி நெல் அறுவடைப் பணிகள் தொடங்கியுள்ளதால், நாளது தேதியில் 1176 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப் பட்டு செயல்பட்டு வருகிறது. நடப்பு கொள்முதல் பருவத்திற்காக 8281 பருவகாலப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு 3448 எண்ணிக்கையிலான தூற்றும் இயந்திரங்கள், 3980 எண்ணிக்கையிலான ஈரப்பத சோதனைமானிகள், தேவையான அளவு காலி சாக்குகள் கொள்முதல் நிலையங்களுக்கு அனுப்பப்பட்டு வருகிறது. நேரடி கொள்முதல் நிலையங்கள் திறப்பது மற்றும் புகார்கள் தொடர்பாக தலைமை அலுவலக உழவர் உதவி மையம் சேவை 1800 599 3540 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் மூலம் நிவர்த்தி செய்து கொள்ளவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்ப, தேவையான கூடுதல் இடங்களில், நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்து எவ்வித புகாருக்கும் இடமின்றி விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்திட ஏற்கனவே மாவட்ட ஆட்சியர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துக்கொள்ள ப்படுகிறது.

இவ்வாறு அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் தெரிவித்தார்.

ஈரோடு சட்டப்பேரவைத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து

## வெற்றி வாகை சூடி, ஒன்றிய பி.ஜே.பி. அரசுக்கு எச்சரிக்கைக் குரலாக ஒலிப்போம்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜன. 14-

ஈரோட்டில் நடைபெறவிருக்கும் சட்டப்பேரவை இடைத்தேர்தலில் தி.மு.க. வேட்பாளரை ஆதரித்து, ஒன்றிய பி.ஜே.பி. அரசுக்கு எச்சரிக்கைக் குரலாக அமைய பாடுபடுவோம் என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஈரோட்டில் நமது கொள்கைச் செல்வம் ஈ.வெ.கி.ச.இளங்கோவனின் ஈடுசெய்ய இயலாத இழப்பின் காரணமாக ஏற்பட்ட சட்டப்பேரவைத் தொகுதி காலியிடத்தை நிரப்ப, இடைத்தேர்தல் வரும் பிப்ரவரி 5 ஆம் தேதி நடைபெறும் என்று இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

இன்னும் 10, 12 மாதங்களேதான் அந்தப் பதவியின் காலம் என்றாலும், இடைத்தேர்தல் அறிவிப்பை ஏற்று, அத்தொகுதி, தி.மு.க.வின் அன்பான வேண்டுகோளை ஏற்று, காங்கிரஸ், தி.மு.க.வுக்கு விட்டுக் கொடுத்ததன்மூலம், தமிழ்நாட்டில், 'திராவிட மாடல்' ஆட்சி நாயகரின், தி.மு.க.வின் தலைமையில் உள்ள கூட்டணி கொள்கைக் கூட்டணிதான், வெறும் பதவிக் கூட்டணி அல்ல என்று பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

**காங்கிரஸ் பெருந்தன்மை!**

காங்கிரஸ் கட்சித் தலைமையின் பெருந்தன்மையையும், கொள்கைப் பார்வையையும் சிறப்பாக வெளிப்படுத்துகின்ற ஓர் இசைவு என்பதற்காக அதனைப் பாராட்டுகிறோம்.

இடைத்தேர்தல் என்பது நடைபெறும் ஆட்சியின் சாதனைகளுக்கான ஓர் உரைகல் ஆகும்! அந்த வகையில் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமும் சாதனைக்கு மேல் சாதனைகளை நமது முதல



மைச்சர் தலைமையிலான தி.மு.க. அரசு நிகழ்த்தி, உலகம் தழுவிய பாராட்டினைப் பெற்று, புகழ் மகுடம் சூட்டிக் கொண்டுள்ளது!

பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு ஒருபுறம் தங்களுடையக் கொள்கை கூட்டுறவு கூட்டாட்சி (Cooperative Federation) என்று வாயால் உச்சரித்துக் கொண்டு, மறுபுறத்தில் உரிய நிதிகளைக்கூட பாரபட்சமின்றித் தராமல், பேரிடர் காலங்களிலும், புயல், மழை, வெள்ளம் பாதிப்பில்கூட ஓர் அணா கூடத் தராது, வெறும் ஆய்வுக் குழுக்களை, சடங்காச்சாரமாக அனுப்பி, ஒரவஞ்சனை ஆட்சி செலுத்தும் நிலையில், நிதிப் பற்றாக்குறை, நிதி நெருக்கடியிலும் மக்கள் நலத் திட்டங்களில் கல்வி, குறிப்பாகப் பெண் கல்வி, ஆல்போல் தழைத்து, அருகுபோல வேரோடி உலகத்தாரை வியப்பின் விளிம்பிற்குத் தள்ளுகிறது!

**ஆர்.எஸ்.எஸ். கொள்கை பரப்பும் ஆளுநர்!**

மாநில ஆளுநர் என்ற ஓர் ஆர்.எஸ்.எஸ். கொள்கை பரப்பு பொறுப்பாளராக தன்னைக் கருதி, ராஜ்பவனத்தைக் காவி மயமாக்கி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுக்கு முட்டுக்கட்டை போட்டு, தினமும் ஒரு போட்டி அரசு நடத்துவதையும் தாண்டி, மரபுகளையும், அரசமைப்புச் சட்ட விதிகளையும்கூட பின்பற்றாத அநீதிக்கான ஏஜெண்டாக திட்டமிட்டு நடந்து, தி.மு.க. ஆட்சிக்குத் அன்றாடத் தொல்லைக் கருவியாக உள்ள ஒருவரையும், கடமை தவறிய, மாநில உரிமைகளை அடகு வைத்து, அப்படிப்பட்ட ஆளுநரின் ஏவுகணைகள்போல் (எடுபிடிகள் என்ற சொல்லைத் தவிர்த்து) நடந்துவரும் பல கடமை தவறும் எதிர்க்கட்சிகளும் நல்ல வண்ணம் அவ்வப்போது பதிலளித்து, கடமையாற்றுவதில் கண்ணும் கருத்துமாய் இருக்கிறார் நமது முதலமைச்சர்!

**ஈரோடு இடைத்தேர்தலில் தி.மு.க.வுக்கு ஆதரவு!**

நெருக்கடியிலும், நிதி மேலாண்மையினை (Fiscal Management) மிக அற்புதமாகச் செய்து, ஏழை, எளிய மக்கள், ஒடுக்கப்பட்ட கோடானு கோடி மக்களின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்க ஆட்சியைக் கடந்த 3 ஆண்டுகளுக்கு மேல் நடத்தி, நல்லவர்களின் - நடுநிலையாளர்களின், தாய்மார்களின் பாராட்டைப் பெறத் தவறவில்லை.

இதனை வெளிப்படையாக சாதித்துள்ளனர். ஈரோடு இடைத்தேர்தல்மூலம், இந்த ஆட்சிக்கு உரிய நற்சான்றிதழை மக்கள் நிச்சயம் வழங்குவர்.

தி.மு.க. வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள சந்திரகுமார் அவர்களை, திராவிடர் கழகம் ஆதரித்து, வெற்றி பெறச் செய்ய முனைப்புடன் ஆயத்தமாகும்.

இத்தருணத்தில் ஈரோடு இடைத்தேர்தல் வெற்றி என்பது, தி.மு.க. ஆட்சிக்கு மேலும் ஊக்க மாத்திரையாக அமைவதோடு, மாநில அரசின் உரிமைக்கு எதிராக, ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர்ந்து நடத்திடும் ஒன்றிய அரசுக்கும், மக்கள் தரும் எச்சரிக்கைக் குரலாகவும் அமையும் என்பது நிச்சயம்!

அறிவிக்கப்பட்டுள்ள வேட்பாளர் சந்திரகுமார் அவர்கள், தமிழ்நாடு சட்டப்பேரவையில் அனுபவமும் பெற்ற அரசியல் பண்பாளர்.

திராவிடர் கழகம் திண்ணைப் பிரச்சாரம், தெருப் பிரச்சாரம் எல்லாவற்றிலும் தன் பங்களிப்பை அளித்து மகிழும்!

தி.மு.க. கூட்டணியின் வெற்றி மகுடத்தில், மற்றொரு முத்தாக ஈரோட்டு வாக்காளப் பெருமக்கள் பதித்து, தங்களது நன்றி உணர்வைக் காட்டுவார்கள் என்று உறுதியாக நம்புகிறோம்!

திராவிடர் கழகம் திண்ணைப் பிரச்சாரம், தெருப் பிரச்சாரம், மேடைப் பிரச்சாரம் எல்லாவற்றிலும் தனது பங்களிப்பை அளித்து மகிழும்.

இவ்வாறு திராவிடர் கழகத்தலைவர் கி.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் ஆலோசனைப்படி கிழக்கு மாவட்டம் வாழப்பாடி தெற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாள் விழா மற்றும் கழக அரசின் சாதனைகள் விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் வேலூர் கென்னடி கலந்து கொண்டு அரசின் சாதனைகளை எடுத்துரைத்தார். கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் மாதேஸ்வரன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ. சீனிவாசன் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சீர்காழி கிழக்கு ஒன்றியத்தில் -

## மாற்றுக்கட்சியினர் 124 பேர் கழகத்தில் இணைந்தனர்!

### நிவேதா எம்.முருகன் முன்னிலை! எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. - பஞ்சு.குமார் பங்கேற்பு!

மயிலாடுதுறை. ஜன.14-

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி கிழக்கு ஒன்றியம் பூம்புகார், கீழையூர் கிராமத்தை சேர்ந்த மாற்றுக் கட்சிகளை சேர்ந்தவர்கள் தி.மு.க.வில் இணையும் நிகழ்ச்சிதிருவெண்காட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு சீர்காழி கிழக்கு ஒன்றியச் செயலாளர் பஞ்சு.குமார் தலைமை தாங்கினார். சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் முத்து.மகேந்திரன், ஜி.என்.ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் தியாகராஜன் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த 124 பேர் அக்கட்சியில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். கழகத்தில் இணைந்தவர்களுக்கு இரு வண்ண கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டு கழகத்தில் இணைத்து கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சியில் சீர்காழி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் எம்.தினேஷ்குமார், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் தேசப்பன், முன்னாள் ஒன்றியக் குழு தலைவர்கள் கமலஜோதிதேவேந்திரன், ரவி, கழக நிர்வாகிகள் நெடுஞ்செழியன், துரைராஜன், சுதாகர், உத்திரமூர்த்தி, கோபி, தமிழரசன், வடிவேல்ரவிச்சந்திரன், ஜீவராஜ்சேதுரமேஷ், தினகரன், முடிவில் இளைஞர் அணி சரவணன் நன்றி கூறினார்.

## விடுமுறை அறிவிப்பு!

தை முதல் நாள் தமிழர் திருநாள், தமிழ்ப் புத்தாண்டு மற்றும் திருவள்ளுவர் திருநாளையொட்டி 'முரசொலி' அலுவலகத்துக்கு 14.01.2025 - செவ்வாய்க் கிழமை மற்றும் 15.01.2025 - புதன் ஆகிய இரு நாட்கள் விடுமுறை.

எனவே முரசொலியின் அடுத்த இதழ் 17.01.2025 வெள்ளி அன்று வழக்கம் போல் வெளிவரும்.

- தலைமை நிர்வாகி
முரசொலி



நம் தாய் திருநாட்டின் விடுதலைக்காக தன் இன்னுயிரையே தியாகம் செய்த, தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் 93வது நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவச் சிலைக்கு திருப்பூர் வடக்கு மாநகர கழக செயலாளரும், திருப்பூர் மாநகராட்சி மேயருமான ந.தினேஷ்குமார் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதில் திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் தோழர் கே.சுப்பராயன், மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்ரமணியம், மாமன்ற உறுப்பினர் செந்தூர் முத்து உள்பட மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பகுதி கழக, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.